[1993 பிப்ரவரி 9

வினா எண் 27, திரு. நா. சா. பழனிசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

27—

வேன்களுக்கான ஆண்டு வரி குறைப்பு.

*11100—திரு. நா. சா. பழனிசாமி :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வேன்களுக்கு (Maxi Cab) ஆண்டு வரி ரூ. 4,000 ஆக இருப்பதைக் குறைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

12 இருக்கைகள் கொண்ட சுற்றுலா வேன்களுக்கு ஆண்டு வரி ரூ. 6,000 என 1—10—1991 முதல் விதிக்கப்பட்டுள்ளது. அதைக் குறைக்கும் செயற்குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேன்களைத் தான் கிராமப்புறங்களில் அதிகமானவர்கள் திருமணம் என்றாலும், ஈமச் சடங்குகள் என்றாலும் பயன்படுத்துகிற நிலை இருக்கிறது. அவற்றிற்கு வரி அதிகமாக விதித்ததன் காரணமாக இன்றைக்கு அதிகமான வாடகை கேட்கிறார்கள். ஆனால் ஆம்னி பஸ்கள் ஒரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு பயணிகளை எடுத்துச் செல்லும்போது சொகுசுக் கட்டணமாக அதிகமாக வைத்து வசூலித்து வருபவர்களுக்கு குறைந்த வரி விதித்தும், இந்த வேன்களுக்கு அதிகமான வரி விதித்தும் இருப்பதால் அரசு இதைக் குறைக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பல்வேறு பகுதிகளில் இருக்கின்ற மக்கள் பயன்பெறுவதற்காக இந்த வேன்களை பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். இந்தக் கட்டணத்தை உயர்த்துவதற்குக் காரணம், வேறு மாநிலத்தை நாம் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, கர்நாடக மாநிலத்தில் ஆண்டு ஒன்றுக்கு அந்த மேக்சி கேப் என்று சொல்லப்படுகின்ற அந்த வேனுக்கு விதிக்கப்பட்டுள்ள வரி ரூ. 9,600, கேரள மாநிலத்தில் ரூ. 10,032 என்று விதிக்கப்படுகின்ற காரணத்தால் நாம் குறைந்த அளவு வரியே விதித்திருக்கின்றோம். அத்தோடு,

மட்டுமல்ல, இந்தியாவில் குறிப்பாக நாம் எடுத்துக்கொண்டால், தமிழகத்தில்தான் 7,203 சுற்றுலா வேன்கள் இன்றைக்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதுவே போதும். அதற்கு மேலே நாம் குறிப்பிடுகின்றபோது பொது மக்களுடைய நலனை கருத்திலே கொண்டு, நம்முடைய தமிழகத்தில் ஆற்றல் மிக்க முதலமைச்சராக இருக்கின்ற புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில்தான் இந்தியத் துணைக் கண்டத்திலே வேறு எங்கும் இல்லாத அளவிற்கு — பேருந்துகளில் பயணம் செய்கின்றவர்களுடைய எண்ணிக்கை—ஓராண்டிற்கு 514 கோடி பேர்களைக் கொண்டு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. தமிழகம் தான் இந்தியாவிலே ஒரு எடுத்துக்காட்டாக புரட்சித் தலைவியினுடைய அரசில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. நா. சா. பழனிசாமி: சொகுசு ஆம்னி பஸ்கள் ஒரு இடத்திலேயிருந்து இன்னொரு இடத்திற்குத்தான் பயணிகளை ஏற்றிச் செல்கிறது. அவர்கள் மற்ற விசேஷ காரியங்களுக்கு எல்லாம் வருவதில்லை. அரசியல் கட்சிகள் போன்றவைகள் நடத்துகின்ற மாநாடுகளுக்குக்கூட கூப்பிட்ட இடத்திற்கு வருகின்றவர்கள் இந்த வேன்களை வைத்திருப்பவர்கள். எனவே அப்படிப்பட்ட வேன்களை வைத்திருப்பவர்களுக்கு சிறிய தொழில் செய்பவர்களுக்கு சலுகை அளிக்கின்ற வகையிலே கொஞ்சம் கட்டணத்தைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை மீண்டும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட இடங்களுக்கு வருகின்றவர்கள் வேன்காரர்கள், வேன்களை வைத்துக்கொண்டிருக்கின்ற மேக்சி கேபை பயன்படுத்துகின்றவர்கள். ஆனால் அதே நேரத்தில் இவர்களுக்கு அதிகமான எண்ணிக்கையை நாம் தருகின்றபோது அவர்கள் பஸ் ஸ்டாண்டில் வந்து அந்தப் பயணிகளை பக்கத்திலே இருக்கின்ற கிராமங்களுக்கு எடுத்துச் செல்வதற்குக் கூட பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் பேருந்துகள் இயக்கப்படுகின்றபோது இவர்களுக்கும் அவர்களுக்கும் பல்வேறு இடர்பாடுகள் ஏற்படுகிறது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழகத்திலே தான் அதிகமான வேன்களை நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதையும் நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. பி ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் எல்லா கிராமங்களுக்கும் பஸ்கள் சென்று வருகின்றன. ஆனால் பஸ் போக முடியாத சாலைகள் உள்ள இடங்களில் அரசே சிறிய வேன்களை நியமித்து, அரசால் இயக்கப்படுமா .... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிக் கேள்வி போடவும் வினா எண் 28. திரு. தே. ஜனார்தனன், மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர்.

28—

தென்னாற்காடு மாவட்டம், சாரம் கூட்டுறவு நூற்பாலை நஷ்டத்தில் இயங்குதல்

*9872—திரு. தே. ஜனார்தனன் :

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பார் :—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள சாரம் கூட்டுறவு நூற்பாலை நஷ்டத்தில் இயங்குவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை இலாபத்தில் இயங்கச் செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்

(ஆ) இலாபத்தில் இயங்க அரசு எல்லாவித நடவடிக்கையும் எடுத்து வருகிறது.

திரு. தே. ஜனார்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நூற்பாலைகள் நஷ்டத்திலே இயங்குவதற்குக் காரணம் என்னவென்று நான் அறிய விரும்புகிறேன். இந்த நூற்பாலைகளில் நிர்வாக இயக்குநர்களாக வருவாய்த்துறை அதிகாரிகள் நியமிக்கப்படுவதன் காரணமாகத் தான் நஷ்டங்கள் ஏற்படுகின்றது என்ற ஒரு கருத்து நிலவுகிறது. இது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.